பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 25 | புதன்கிழமை | 08.05.2024 | அதிர்வு 281

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவா?

**இன்னும் முடிவில்லை என்கிறார் மஹிந்த**



ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது

06

# நிரந்தர அரசியல் தீர்வு இல்லாமல் எவ்வித நல்லிணக்கமும் ஏற்படாது!

## இதை உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவோம் என்று நாடாளுமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

"இலங்கையில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வு இன்றி எந்தவித நல்லிணக்கமும் ஏற்படாது என்பதை உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

06




# விசா விநியோக மோசடியை அம்பலப்படுத்திய இளைஞருக்கு நெருக்கடி கொடுத்தால் பெரும் மக்கள் போராட்டம் வெடிக்கும்!

## நாடாளுமன்றில் வைத்து அரசுக்கு ஜே வி.பி. கடும் எச்சரிக்கை



"விசா விநியோகத்தில் இடம்பெறவிருந்த பாரிய மோசடியை தனி ஒருவனாக இளைஞர் ஒருவர் அமபலப்படுத்தியுள்ளார். எனவே, தவறுகளை அரசு திருத்திக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து அந்த இளைஞருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தினால் அரசு மீண்டும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். அரசுக்கு எதிராக மீண்டும் சட்டத்தரணிகளும் மக்களும் ஒன்றிணைவார்கள்."

- இவ்வாறு ஜே வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இந்த எச்சரிக்கையை விடுத்த அவர், மேலும் பேசுகையில்,

"வெளிநாட்டவர்களுக்கான விசா விநியோகத்தில் இடம்பெறவிருந்த பாரிய மோசடியை இளைஞர் ஒருவர் தனி ஒருவனாக வெளிப்படுத்தியுள்ளார். அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள பேச்சுரிமையை அந்த இளைஞர் பயன்படுத்தியுள்ளார். அந்த இளைஞர் குறிப்பிட்ட விடயங்கள் சமூகவலைத்தளங்களில்

06

# இந்தப் புதிய விசா முறைமை ஊடாக வருடாந்தம் 1800 கோடி ரூபா மோசடி!

## சபையில் அம்பலப்படுத்திய சம்பிக்க எம்.பி.



"அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விசா முறைமை ஊடாக வருடாந்தம் சுமார் 1800 கோடி ரூபா மோசடி செய்யப்படும் என்று மதிப்பிடப்படுகின்றது. ஆகவே, வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் பொறுப்பை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கியதன் பின்னணியில் இருப்பவர் யார் என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் எதிரணி எம்.பி.யுமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

06




நேற்று ஆங்கில இணையத் தளச் செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு செய்தியைப் பார்த்தபோது எனக்குள் ஒரு சந்தேகம் எழுந்தது. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னரான செய்தியை தவறாக இப்போது இணைத்து விட்டார்களோ என்ற ஐயம்தான் அது.

ஊன்றி வாசித்த போதுதான் அது நேற்றைய செய்தி என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. ஆனால் 17 வருடங்களுக்கு முந்திய குற்றச்சம்பவம் ஒன்று தொடர்பில் அது 'ஃபாலோ அப்' நடவடிக்கையாம்...!

2007 இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில், அவரின் கால் பிடிக்கும் அடிமை போல அரசியல் செய்த முன்னாள் அமைச்சர்

06

# இலங்கையில் நடப்பது பொலிஸ் இராஜ்ஜியமா?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி




"கருத்து தெரிவித்தமைக்காக விசாரணைக்கு அழைப்பதற்கு இலங்கையில் நடப்பது பொலிஸ் இராஜ்ஜியமல்ல. இலங்கை ஜனநாயக நாடு."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"விசாப் பிரச்சினை குறித்து அண்மையில் விமான நிலையத்தில் கருத்துத் தெரிவித்த சந்தரு குமாரசிங்கவை பொலிஸ்'க்கு அழைத்து அது குறித்து வாக்குமூலம் பெறப்பட்டது. இது பொலிஸ் இராஜ்ஜியமல்ல, இது ஏகாதிபத்திய நாடல்ல, இது ஜனநாயக நாடு. பேச்சுச் சுதந்திரம் அவருக்கு இருப்பதால் அவருக்கு இடையூறு விளைவிக்க முடியாது. அவரை தொந்தரவு படுத்த வேண்டாம்.

சந்தரு குமாரசிங்க அண்மையில் விமான நிலையத்தில் விடயமொன்று தொடர்பில் தனது கருத்தை முன்வைத்தமையை சமூக ஊடகங்கள் மூலம் காண முடிந்தது.

இந்த நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் அவருக்கு பேச்சுச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரம் உள்ளது. இதற்கு இடையூறு ஏற்படுத்த முடியாது.

அவர் அவரது கருத்தை முன்வைத்துள்ளார். அதனால் இந்த விடயத்தை மேலும் கொண்டு செல்வதில் அர்த்தமில்லை என்பதால் இந்த விடயத்தை இந்த நிலையில் முடிவுக்கு கொண்டு வருமாறு பிரதமரிடம் கோருகின்றேன்."– என்றார்

# புதிதாக 3000 தாதியர்களை இணைப்பதற்கு நடவடிக்கை

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



"அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 3,000 தாதியர்களை புதிதாக இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன."

– இவ்வாறு சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தனது கேள்வியின்போது –

"2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கல்வி பொது தராதர உயர் தரத்தில் கணிதம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் தோற்றியுள்ள மாணவர்கள் தாதியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வருடம் செப்டம்பர் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது 3100 பேர் அதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அந்த வகையில் மேலும் 3,863 பேர் இந்த சேவையில் இணைத்துக் கொள்வதற்காக காத்திருப்பு பட்டியலில் காணப்படுகின்றனர்."– என்றார்.

இதற்கு அமைச்சர் ரமேஷ் பத்திரண தொடர்ந்து பதிலளிக்கையில் –

"3,000 தாதியர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் நாட்டில் 45,000 தாதியர்கள் சேவையில் உள்ளனர். தற்போது சுமார் 1000 பேருக்கான வெற்றிடமே நிலவுகிறது. அந்த வெற்றிடங்களையும் விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுப்போம்.

எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது போல் 45 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படவில்லை. 45 ஆயிரம் பேர் தற்போது சேவையில் உள்ளனர் என்பதே உண்மை."– என்றார்.





# பிரித்தானிய இந்தோ – பசிபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மெல்லருடன் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு

பிரித்தானிய வெளிவிவகார மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தி – பசிபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மெல்லருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசஸக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கான எதிர்க்கட்சித் தலைவரின் திட்டங்கள் தொடர்பில், பென் மெல்லருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியை ஏற்படுத்த தாம் முனைகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.










INDSRI FERRY
யாழ்
↕
நாகை
சுற்றுலா செல்வோம்
சிவகங்கையில்
13/05/24
இல் இருந்து தினசரி சேவை
ரூ 15,000*
இல் இருந்து
• பாரம்பரிய சுற்றுலா
• வணக்கத்தலங்கள்
• அழகிய மலையகம்
மேலும் அனுபவிக்க...
பதிவுகளுக்கு
www.sailindsri.com
Google play
Download on the App Store

# நீதிமன்றத்தை அவமதிக்கும் லால்காந்தவின் கருத்தால் நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சை

தமது ஆட்சியில் நீதிமன்றத்தின் அதிகாரத்தைச் செயற்படுத்தும் அதிகாரத்தை தமது உறுப்பினர்களுக்கு வழங்குவோம் என ஜே .வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த தலைவர்களில் ஒருவருமான லால்காந்த குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டதுடன் அரச மற்றும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஜே .வி.பி.யை வசைபாடினர்.

ஜே வி.பி.யின் கடந்த காலப் படுகொலைகள், அட்டூழியங்கள், அரச விரோத செயல்கள் தொடர்பில் அரச மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பட்டியலிட்டதுடன் அவை தொடர்பில் விசாரணைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதுடன் சபையில் தனி ஒருத்தியாக இருந்த ஜே .வி.பி. (தேசிய மக்கள் சக்தி) எம்.பி. ஹரிணி அமரசூரியவிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்தபோது அவரும் அவர்களுடன் சளைக்காது வாதாடினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் (பராட்டே) என்பன மீதான விவாதத்தில் உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க,

"மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் தொடர்பில் நாட்டு மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டத்தில் அக்கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தமது ஆட்சியில் நீதிமன்றத்தின் அதிகாரத்தைச் செயற்படுத்தும் அதிகாரத்தைத் தமது உறுப்பினர்களுக்கு வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1971, 1988, 1989, 2022 ஆகிய காலப்பகுதிகளில் மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்ட விதம் நினைவுக்கு வருகின்றது. காட்டுமிராண்டித்தனமாக அரச அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கும் இவர்களுக்கு அதிகாரத்தை வழங்குவதா என்பதனை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

பொலிஸ் மற்றும் நீதிமன்றத்தின் அதிகாரத்தைத் தமது உறுப்பினர்களுக்கு வழங்குவதாகக் குறிப்பிடுவதனை தேசிய மக்கள் சக்தியின் எம்.பி. ஹரிணி அமரசூரிய ஏற்றுக்கொள்வாரா என்பதனை அவரிடம் வினவுகின்றேன்." – என்றார்.

இதன்போது எழுந்து பதிலளித்த ஹரிணி அமரசூரிய எம்.பி, "நீதிமன்றத்தின் அதிகாரத்தைச் செயற்படுத்தலை மக்கள் விடுதலை முன்னணிக்கும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கும் வழங்குவதாக நாம் ஒருபோதும் குறிப்பிடவில்லை." – என்றார்.

இதன்போது, "லால்காந்த குறிப்பிட்டார், லால்காந்த குறிப்பிட்டார்" என அரச, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கூச்சலிட்டனர்.

தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, "ஹரிணி அமரசூரிய போன்ற படித்த உறுப்பினர் ஒருவர் மக்கள் விடுதலை முன்னணி போன்ற காட்டுமிராண்டித்தனமான கட்சியின் மேடையில் ஏறி தனது கொள்கையை மாற்றிக்கொண்டது கவலைக்குரியது. தவறான பக்கம் சென்று விட்டார்." – என்றார்.

இதன்போது எழுந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, "1988, 1989 காலப்பகுதிகளில் 27 நீதிமன்றக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. நுகேகொடை, கல்கிஸை, ஹோமாகம ஆகிய நீதிமன்றங்களின் மீது மிக மோசமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஹோமாகம நீதிமன்றத்தின் நீதிபதியின் கறுப்பு மேலங்கி பலவந்தமாகக் கழற்றப்பட்டு மாட்டின் மீது அந்த அங்கி அணிவிக்கப்பட்டு மாடு வீதியில் விரட்டப்பட்டது. மக்கள் மத்தியில் இன்றும் அந்த அச்சம் காணப்படுகின்றது." – என்றார்.



இதன்போது, "நீதிமன்றம் மற்றும் பொலிஸ் அதிகாரத்தைச் சாதாரண மக்களுக்கு வழங்குவதனை ஹரிணி அமரசூரிய எம்.பி. ஏற்றுக்கொள்வாரா?" – என அரச மற்றும் எதிரணி எம்.பி.க்கள் கேள்வி எழுப்பினர்.

இதன்போது மீண்டும் எழுந்த ஹரிணி அமரசூரிய எம்.பி., "நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்குவதனை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை." – என்றார்.

தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, "மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் (லால்காந்த) குறிப்பிட்ட குரல் பதிவு என்னிடம் உள்ளது. அதனை ஒலிபரப்ப அனுமதி வழங்குங்கள்." – என்று சபைக்குத் தலைமை தாங்கிய உறுப்பினரிடம் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த சபைக்குத் தலைமை தாங்கிய கிங்ஸ் நெல்சன் எம்.பி., "அனைவரிடமும் குரல் பதிவு உள்ளது. அனைவரும் ஒலிபரப்புச் செய்தால் அது பிரச்சினையாகும். அத்துடன் வெளி நபர்களின் குரல்களை சபையில் ஒலிபரப்ப முடியாது." – என்றார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான ஹர்ஷண ராஜகருணா, "மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் லால்காந்த குறிப்பிட்டதாகக் கூறும் குரல் பதிவை சபையில் ஒலிபரப்புச் செய்து சட்டத்தை தனிநபர் ஒருவர் செயற்படுத்தும் போது அதன் விளைவு பாரதூரமாக அமையும். ஆகவே. அவரின் கருத்து எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதால் இதனை அலட்சியப்படுத்த முடியாது. எனவே, இது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்." – என்று நீதி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அரச எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பலரும் ஜே .வி.பி. மீது கடும் கண்டனங்களை வெளியிட்டு கருத்துக்களை வெளியிட்டதால் சபை அரைமணிநேரம் அமளிதுமளிப்பட்டது.

இறுதியில் நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்குவதாகக் குறிப்பிடுவது நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமையும். ஆகவே, இந்த விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆளும், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

# ஐக்கிய தேசியக் கட்சி மீண்டெழுந்துவிட்டது!

## இனித்தான் அரசியல் ஆட்டம் சூடுபிடிக்கும் என்று அக்கட்சியின் செயலர் பாலித கருத்து

"ஐக்கிய தேசியக் கட்சி மீண்டெழுந்துவிட்டது. அக்கட்சியின் பலம் என்னவென்பது அடுத்த தேர்தலில் தெரியவரும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர். மே தினத்தில் அவர்கள் மேடையேறுவார்கள் என நாம் கூறவில்லை. அடுத்துவரும் நாட்களில்தான் அவர்கள் வருவார்கள். இனித்தான் அரசியல் ஆட்டம் சூடுபிடிக்கும்.

விழுந்துவிட்டது எனக் கூறப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி எழுந்துவிட்டது. எமது பலம் என்னவென்பது அடுத்துவரும் நாட்களிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் தெரியவரும்.




சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலுக்கு வருவார் என நம்பவில்லை. ஐ.தே.கவில் தலைமைத்துவப் பிரச்சினை ஏற்பட்டபோதுகூட கரு ஜயசூரியவைப் பலிகடாவாக்கிவிட்டு சஜித் பிரேமதாஸ தப்பித்தார்." என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேர்வின் சில்வா அப்போது புரிந்த அடாவடித்தனத்திற்காக, இப்போது 17 ஆண்டுகள் கழித்து கைது செய்யப்பட்டிருக்கிறாராம்.

அச்சமயத்தில் ஒரு நாள் திடீரென ஒரு சில குண்டர்களுடன் தமது வழமையான பாணியில் அரச தொலைக்காட்சிச் சேவையான ரூபவாஹினி அலுவலகத்துக்குள் புகுந்து, ஒரு செய்தியாளரைத் தாக்கி அட்டகாசம் பண்ணினார் அமைச்சர் மேர்வின் சில்வா. தொலைக்காட்சி நிலைய ஊழியர்கள் ஒன்று திரண்டு, சூழ்ந்து நின்று, செமத்தியாக அவரையும் அவரது குழுவினரையும் கவனித்து அனுப்பி வைத்தனர். இரத்த காயங்களுடனும், அவர் மீது ஊற்றப்பட்ட றோஸ் நிற திராவகத்தின் கறைகளுடன் மேர்வின் சில்வாவை மீட்டு வருவதே பாதுகாப்புப் பிரிவினருக்குப் பெரும் சிரமமாக இருந்தது. இரத்தம் சொட்டச் சொட்ட மேர்வின் சில்வாவைப் பாதுகாப்புப் படையினர் காப்பாற்றி மீட்டு வந்த வீடியோ காட்சி முந்தைய தலைமுறைக்கு நன்கு நினைவில் இருக்கும். எனினும் ஒரு நினைவூட்டலுக்காக ஒரு சிறிய வீடியோ காட்சியை இப்பத்தியில் இணைத்துள்ளேன்.

அந்த வழக்குக்காக இப்போது மேர்வின் சில்வாவைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி இருக்கிறார்களாம் நமது பொலிஸார். அவரை கொழும்பு மேலதிக நீதிவான் 5 லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

அந்தச் சமயத்தில் மேர்வின் சில்வாவுடன் அங்கு சென்று வாங்கி கட்டிய மற்றொரு பிரமுகர் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் லால் பீரிஸ். அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவும், அதற்கு முன்னர் அவர் நாட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக அவரின் வெளிநாட்டு பயணத்திற்குத் தடைவிதித்தும் நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஊடகவியலாளர் நண்பர் நிமலராஜன் படுகொலை நடந்த போது, ஈ.பி.டி.பி. உறுப்பினராக இருந்த நெப்போலியன் மற்றும் சிலருக்கு எதிரான வழக்கு ஒன்று அதற்காக முன் எடுக்கப்பட்டது. 20 ஆண்டுகள் கிடப்பில் அந்த வழக்கு கிடந்தமையால், அதன் காரணமாக அது பின்னர் சட்ட ரீதியாகக் கைவிடப்பட்டது.

அப்படி இந்த வழக்கும் சட்ட ரீதியாகவே கைவிடப்படுவதற்கு மூன்று ஆண்டுகள் இருக்கையில், இவ்வழக்கில் இதுவரை கும்பகர்ணத் தூக்கம் தொடர்ந்த நமது பொலிஸார், அது கலைந்து எழுந்திருந்து நடவடிக்கை எடுத்திருப்பதை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்...!

CLICK HERE VIDEO

## விசா விநியோக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வெளியாகியமை தொடர்பில் மக்கள் அவதானம் செலுத்தியதன் பின்னரே அமைச்சரவை பழைய முறைக்கு விசா விநியோகிக்கத் தீர்மானித்துள்ளது.

எனவே, அரசு தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து அந்த இளைஞருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால் சட்டத்தரணிகளும், நாட்டு மக்களும் அந்த இளைஞருக்குச் சார்பாகச் செயற்படுவார்கள். அரசுக்கு எதிராக மீண்டும் ஒன்றிணைவார்கள். அரசு மீண்டும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். கடந்த கால நிகழ்வுகளை அரசு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்." – என்றார்.

## இந்தப் புதிய விசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அவர்,

மேலும் பேசுகையில்,

"2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 12 சதவீதமாகக் காணப்பட்ட ஏழ்மை தற்போது 26 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. பொருளாதாரப் பாதிப்பால் வங்கிக் கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 2023.12.31 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாத்திரம் வங்கிகள் அறவிடாத மொத்தக் கடன் 7387 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றது. இது வங்கிக் கடன்களில் 12 சதவீதமாக உள்ளது

இந்தியாவில் அறவிடாத வங்கிக் கடன் 6.5 சதவீதமாகவும், பங்களாதேஸில் 8 சதவீதமாகவும், பாகிஸ்தானில் 7.3 சதவீதமாகவும் காணப்படுகின்றது. வங்கிக் கட்டமைப்பில் அறவிட முடியாத கடன் 3 சதவீதத்தைக் காட்டிலும் உயர்வடையும் போது அது வங்கிக் கட்டமைப்புக்கு ஆரோக்கியமானதாக அமையாது.

இலங்கை வங்கியின் அறவிடா கடன் 336 பில்லியன் ரூபாவாகவும், மக்கள் வங்கியின் அறவிடா கடன் 280 பில்லியன் ரூபாவாகவும் காணப்படுகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை ஆகிய அரச நிறுவனங்கள் பெற்றுக்கொண்ட கடன்களை மீள அறிவிடாததால் அரச வங்கிகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி இலங்கை வங்கியின் சேவை சங்கத்தினர் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் எழுதி இலங்கை வங்கியின் உள்ளக மோசடி மற்றும் அரசியல் தலையீடுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தீர்வு கோரிய நபர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, விசா விவகாரம் தற்போது பிரதான பேசுபொருளாகியுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் முறையாக நிகழ்நிலை முறைமை ஊடாக இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகிக்கப்பட்டது. ஆனால், தற்போது இந்த சேவை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 200 பில்லியன் டொலரை முதலீடு செய்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. உண்மையில் அரசுக்கு எவ்வித வருமானமும் இந்தத் திட்டத்தால் கிடைக்கப்போவதில்லை.

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விசா முறைமை ஊடாக வருடாந்தம் சுமார் 1800 கோடி ரூபா மோசடி செய்யப்படும் என்று மதிப்பிடப்படுகின்றது. ஆகவே, வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் பொறுப்பை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கியதன் பின்னணியில் இருப்பவர் யார் என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும்." – என்றார்.

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொடர்பில் இன்னும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மொட்டுக் கட்சியின் விசேட கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மஹிந்த மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், வெற்றி வேட்பாளர் ஒருவரையே தமது கட்சி களமிறக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நிரந்தர அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த மே மாதத்துடன் யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த நேரத்தில் இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சரின் தலைமையில் நல்லிணக்கத்துக்கான செயலணி தொடர்பான அரசு முன்மொழியும் சட்டமூலம் குறித்து கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இதிலே நான் சொன்ன சில விடயங்களை இந்தச் சபையில் பதிவு செய்வது அத்தியாவசியம்.

அதாவது யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் விசேடமாகவும் மற்றும் யுத்த காலம் முழுவதும் பலவிதமான அத்துமீறல்கள் நடந்துள்ளன. உலகத்தில் நடக்கும் எந்தவொரு யுத்தமும் சுத்தமானது கிடையாது. சுத்தமான யுத்தம் என்று எதனையும் அழைக்க முடியாது. ஆயுதப் போரில் அத்துமீறல்கள் நடந்தே ஆகும். ஆனால், அவ்வாறாக நடக்கும்போது அதனால் பாதிக்கப்படுபவர்கள் தொடர்பில் அரசுக்குப் பொறுப்பு உள்ளது. அதாவது அத்துமீறல்கள் தொடர்பில் விசாரிப்பதில் – விசேடமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் என்ன நடந்தது? யார் இதற்குப் பொறுப்பு? அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்ற விபரங்களை உறவினர்களுக்குத் தெளிவுபடுத்துவதும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதும் அரசின் பொறுப்பாகும்.

காணாமல் ஆக்கப்படுவது பலரால் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால், சாட்சியங்களின் அடிப்படையில், கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவுக்கு முன்னால் வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் இறுதி இரண்டு நாட்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அரச படையினரிடம் சரணடைந்தனர் என்று அரசு நியமித்த ஆணைக்குழுவினாலேயேசொல்லப்பட்டுள்ளது. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

இந்த விடயத்தில் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமானஆணைக்குழு, உடலகமஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு போன்றவற்றில் பலவிதமான விடயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டு முன்மொழிவுகள் உள்ளன. எந்த முன்மொழிவும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இறுதியாக இந்த அனைத்து ஆணைக் குழுக்களின் முன்மொழிவுகளையும் ஆராய்வதற்காக இன்னுமொரு ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. அதன் முன்மொழிவுகளும் உள்ளன. இவை எவற்றையும் நடைமுறைப்படுத்தவில்லை. இவை அரசின் ஆணைக்குழுக்களாகும். இவற்றின் முன்மொழிவுகளை

07▸

# விசா மோசடி மத்திய வங்கி மோசடியை விட அதிகம்!

## சபையில் ஹக்கீம் எம்.பி. சுட்டிக்காட்டு



"வெளிநாட்டுப் பயணிகளிடமிருந்து மேலதிகமாக 25 டொலர்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தர இருப்பதாக எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு விசா வழங்கும் குறித்த தனியார் வெளிநாட்டு நிறுவனத்துக்கு அதன் மூலம் மாத்திரம் 6 கோடி 25 இலட்சம் அமெரிக்க டொலர் கிடைக்கப் பெறும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே மேற் கண்டவாறு கூறிய, அவர் மேலும் பேசுகையில்,

"நாட்டில் ஊழல் மோசடிகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் எமது நாட்டுக்குப் புதிய முறைமை ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ள நிலையில், நாட்டுக்குள் வரும் வெளிநாட்டவர்க ளுக்கான விசா வழங்குவதில் பாரிய மோசடி இடம்பெற்று வருவது தொடர்பில் கடந்த சில தினங்களாக ஊடகங்க ளில் தலைப்புச் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால், அரசு இது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுத்தி ருக்கின்றது.?

சுற்றுலாப் பயணிகளிடமிருந்து மேலதிகமாக 25 டொலர் களை அறவிட அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இந்த வருடத்தில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தர இருப்பதாக எதிர்வுகூறப்பட்டிருக்கின்றது. அவ்வாறு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்தால் அவர்களுக்கு விசா வழங்கும் குறித்த வெளிநாட்டு தனியார் நிறுவனத்துக்கு அதன் மூலம் மாத்திரம் 6 கோடி 25 இலட்சம் அமெரிக்க டொலர் கிடைக்கப் பெறுகின்றது. அதாவது இலங்கை ரூபாவில் 1875 கோடி.

தற்போது இடம்பெற்றுவரும் இந்த மோசடி மத்திய வங்கி மோசடியைவிட பல மடங்கு அதிகம். அத்துடன் இந்த விசா சேவையை எஸ்.எல்.டி. மொபிடல் நிறுவனம் குறித்த நிதி யில் நூற்றுக்கு நான்கு வீதத்தைப் பெற்றுக்கொண்டு வழங் குவதற்குத் தயாராக இருந்த நிலையில், வேறு வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு இவ்வாறான பாரிய நிதியைச் செலுத் துவதால் இந்தப் பணம் யாருடைய பொக்கெட்டுக்குச் செல்கின் றது." – என்று ஹக்கீம் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

## நிரந்தர அரசியல்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நடைமுறைப்படுத்தாது தற்போது இன்னு மொரு நல்லிணக்கத்துக்காகச் செயற்படுத் தப்படும் செயலணி ஒன்று பிரேரிக்கப் பட்டுள்ளது. இவை எங்கள் மக்கள் மத்தி யில் எந்தவிதமான நம்பிக்கையையும் கொடுப்பதாக இல்லை.

ஒரு உள்ளகப் பொறிமுறை மூலமாக அவர்கள் சொல்லும் குறைபாடுக ளுக்கு அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட் டுகளுக்குச் சரியான நீதி கிடைக்காது என் பதற்கு இந்த 15 வருட காலமாக எதுவுமே நடக்காமல் இருப்பதே சான்றாக உள்ளது. இன்னுமொரு செயலணியை அமைத் துச் செப்டெம்பரில் வரவுள்ள ஜெனிவா அமர்வுக்குக் காண்பிக்கும் ஒரு கண்து டைப்பு நடவடிக்கையாக இதனைக் கொண்டு வருவதை நாங்கள் எதிர்க்கின் றோம்.

எவ்வாறாயினும் உள்ளூர் பொறிமுறை யில் நீதி கிடைக்கமாட்டாது. எந்த நீதி விசாரணையாக இருந்தாலும் அது சுயா தீன விசாரணையாக இருக்க வேண்டும். ஒரு சுயாதீன விசாரணையாக இருந் தால் இந்தச் சந்தர்ப்பத்தில் அது சர்வதேச விசாரணையாக மட்டுமே இருக்க முடியும். காரணம் போரிட்ட இரண்டு தரப்பில் ஒரு தரப்பு அரச தரப்பே. ஆகவே, அந்த ஒரு தரப்பில் போரிட்ட தரப்பினரே விசாரணை நடத்துவது அது விசாரணையே அல்ல. சுயாதீன விசாரணையாக இருந்தால் அது சர்வதேச விசாரணையாக மட்டுமே இருக்கும் என்று நாங்கள் 2009ஆம் ஆண்டு காலத்தில் இருந்தே திரும்பத் திரும்பக் கூறி வந்துள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைகள் பேரவையின் விசாரணை அறிக்கை 2015 நவம்பரில் வெளியிடப் பட்டது. அதுவொரு சர்வதேச விசாரணை அறிக்கை. அதனைத் தொடர்ந்து நீதி மன்றப் பொறிமுறை வேண்டும். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சட்டத்தின் முன் னால் நிறுத்தப்பட வேண்டும். அது செய்யப் படவில்லை.

அத்துடன் ஒரு நிரந்தர அரசியல் தீர் வின்றிஇந்தவிதநல்லிணக்கமும்ஏற்படாது. இதனை உலகத்துக்கு வெளிச்சம் போட் டுக் காட்டுவோம். கடந்த ஆட்சிக் காலத் தில் நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி புதிய அரசமைப்பைச் செய்யும் பணி யைச் செய்தோம். அதுவும் நிறைவே றாது அந்தரத்தில் விடப்பட்டது. ஆகவே, உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், அது கண்து டைப்பற்றதாக இருக்க வேண்டுமென் றால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். இந்த அத்து மீறல்கள் தொடர்பில் நீதி செயற்படுத்தப் பட வேண்டும். இவை அனைத்தும் நடப் பதற்கு உகந்த சூழ்நிலை இருக்க வேண் டும்.

ஆனால், உகந்த சூழ்நிலை இப்போது கிடையாது. நில ஆக்கிரமிப்புகள் நடக்கின் றன. தொல்லியல் திணைக்களத்தாலும் வேறு திணைக்களங்களாலும் இவை நடக்கின்றன. பௌத்த மயமாக்கல், சிங்கள மயமாக்கல் போன்றவை நடந்து கொண்டிருக்க நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழுவொன்றை நியமிப்பது என்பது ஒரு சிரிப்புக்குரிய விடயமாகத் தான் எங்கள் மக்களால் பார்க்கப்ப டும்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகி யும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப் படாது பொறுப்புக்கூறல் தொடர்பில் சர் வதேச விசாரணை பொறிமுறை நடந் துள்ளது. ஆனால், சர்வதேச நீதிமன் றப் பொறிமுறை ரோம் சட்டத்தின் மூலம் மட்டுமே நடத்தப்படும். இந்நிலையில், இலங்கை அரசுக்கு எங்களின் சிபாரி சாக ரோம் சட்டத்துக்கு நீங்கள் உங்கள் இணக்கத்தைக் கொடுங்கள். நாங்கள் ஐ.நா.வில் உறுப்பினரே. இந்த நாட்டுக்குள் நடந்தாலும் அது சர்வதேச குற்றமா கவே இருக்கின்றது. அது தொடர்பில் சர்வ தேசத்துக்குப் பொறுப்பு உள்ளது. அது தொடர்பான பொறிமுறை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். சர்வதேச நீதி மன்றப் பொறிமுறை ரோம் சட்டத்தின் மூலம் மட்டுமே நடத்தப்படும். எனவே, இலங்கை அரசு ரோம் சட்டத்துக்கு இணங்க வேண்டும்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திடீர்ப் பொதுத் தேர்தல்....?

செப்டம்பர் அல்லது ஒக்டோபரில் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தல் குறித்துத்தான் இலங்கை அரசியலில் இப்போது அதிகம் பேசப்படுகின்றது.

ஆனால் சத்தம் சந்தடியின்றி, அதை முந்திக் கொண்டு, திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுப்பதற்கான சாத்தியங்கள் அதிகரித்து வருகின்றன என்று கொழும்பில் விடயமறிந்த உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

மொட்டுக் கட்சியின் ஸ்தாபகரும், அக் கட்சியின் அரசியல் சாணக்கியருமான பஸில் ராஜபக்ஷவின் நடவடிக்கைகள், செயற்பாடுகள், நகர்வுகள் போன்றவை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளமையை உணர்த்துகின்றன என்று சுட்டுகின்றன அந்த வட்டாரங்கள்.

கடந்த சனிக்கிழமை நான்காம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மைக் காலத்தில் ஐந்தாவது தடவையாக சந்தித்துக் கலந்தாலோசனை நடத்திய பின்னர் பஸில் ராஜபக்ஷ தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறு சிறு குழுக்களாக அழைத்துக் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டு வருகிறார் என்று கூறப்படுகின்றது.

திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டால், அதை எதிர்கொள்வதற்கான முன்னாயத்தங்களைச் செய்யும்படி அவர் சம்பந்தப்பட்ட எம்.பிக்களை நெறிப்படுத்துகின்றார் என்று கூறப்படுகிறது.

இப்போது திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் எந்தக் கட்சிக்கும் தனித்து அறுதிப் பெரும்பான்மை கிடைக்கக் கூடிய வாய்ப்புக் கிட்டாது என்றும் -

அந்த அரசியல் குழப்ப சூழ்நிலையைப் பயன்படுத்தி, தமக்கு சாதகமான ஒரு தரப்பை ஆட்சியில் அமர்த்தி, அந்தத் தரப்பின் ஆதரவுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பானது என்றும் -

பஸில் ராஜபக்ஷ தரப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை கூறி வருகிறது என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பின்புலத்தில் உடனடி அதிரடிப் பொதுத் தேர்தல் அறிவிப்பினால் வரக்கூடிய பிரச்சினைகள், நிலைமைகள், சாதகங்கள், பாதகங்கள் குறித்தெல்லாம் புலனாய்வுத் தரப்பினருடனும் தனது கட்சியின் மூத்த தலைவர்களுடனும் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடி வருகின்றார் என்றும் கூறப்படுகிறது.

இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்க்கமான முடிவு எதையும் இன்னும் எடுக்கவில்லையாயினும் -

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தேவையானால் அதிரடியாகப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அழைப்பு விடுவதற்கான கதவை அவர் இன்னும் மூடவில்லை, திறந்தே வைத்துப் பார்த்திருக்கின்றார் என்பதுதான் முக்கியமானது.

எது, எப்படி என்றாலும் இன்னும் ஐந்து மாதங்களுக்குள் ஜனாதிபதி தேர்தல் நடப்பது உறுதி. அதை எதிர் கொள்வதற்கு வசதியான களச்சூழல் தமக்கு இன்னும் கிட்டவில்லை என்ற தடுமாற்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் என்பதும் வெளிப்படையான உண்மை.

அந்த நிலைமை தொடர்ந்து நீடித்தால், அதிரடிப் பொதுத்தேர்தல் நடத்தி, அதன் முடிவுகளால் வரக்கூடிய களச் சூழலை ஜனாதிபதி தேர்தலில் தமக்குத் தேவையான நிலைமைக்கு மாற்றலாம் என்ற நம்பிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்படுமானால், அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத்தேர்தலை ஜூன் மாதக் கடைசியிலோ ஜூலை முற்பகுதியிலோ நடத்துவதற்குப் பின்னிற்க மாட்டார் என்று மேற்படி வட்டாரங்கள் விளக்குகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும்போது ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொண்டால், தமது கட்சி கணிசமான எம்.பி. பதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று அவரின் ஐ.தே. கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் எண்ணுகின்றனர். அவர்களும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தத் தமது கட்சித் தலைவருக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

மொட்டுக் கட்சியினர் மற்றும் தனது ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர்களின் நச்சரிப்புத் தாங்காமல் பொதுத் தேர்தல் அறிவிப்பை எச்சமயத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டாலும் வெளியிடக் கூடும் என்பதுதான் தென்னிலங்கையின் அரசியல் நிலைவரமாக இப்போது உள்ளது.



# மக்களவைத் தேர்தலின் 3 ஆம் கட்டத்தில் 60.19 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன

இந்திய மக்களவைத் தேர்தலின் 3 ஆம் கட்ட வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது. நேற்று காலை 7 மணிக்கு ஆரம்பமான 3 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடைபெற்றது.

10 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களிலில் 94 மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.

கர்நாடகா, குஜராத், மஹாராஷ்ட்ரா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் வாக்குப் பதிவு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று நடைபெற்ற தேர்தலில் மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ஜோதிர் ஆதித்ய சிந்தியா, டிம்பில் யாதவ், சிவராஜ் சிங் சவுகான், உள்ளிட்ட 1,352 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இதனிடையே, வாக்களிப்பதற்காக சென்ற பிரதமர் நரேந்திர மோடியை குஜராத் மாநில முதலமைச்சர் பூபேந்திர பட்டேல், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, குஜராத் மாநிலம் அஹமதாபாத் கிழக்கு தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடியில் பிரமதர் மோடி தமது ஜனநாயகக் கடமையை ஆற்றினார்.

வன்முறை இல்லாத தேர்தல் இதுவெனவும் சிறப்பாக பணியாற்றிய தேர்தல் ஆணையாளருக்கு தமது பாராட்டுகளையும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்

உலகின் ஜனநாயக நாடுகளுக்கு முன்னுதாரணமாக இந்தியாவின் தேர்தல் நடைமுறையுள்ளதாகவும் 64 நாடுகளில் இந்தத் தேர்தல் நடைமுறை உள்ளதாகவும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது பாரதப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று மாலை 6 மணியோடு வாக்குப் பதிவு நிறைவடைந்தது. மாலை 5 மணி நிலவரப்படி 60.19 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

**மாநில வாரியாக விபரங்கள்:**

அசாம்: 74.86 வீதம்
பீகார்: 56.01 வீதம்
சத்தீஸ்கர்: 66.87 வீதம்
கோவா: 72.52 வீதம்
குஜராத்: 55.22 வீதம்
கர்நாடகா: 66.05 வீதம்
மத்தியப் பிரதேசம்: 62.28 வீதம்
மகாராஷ்டிரா: 53.40 வீதம்
உத்தரப் பிரதேசம்: 55.13 வீதம்
மேற்கு வங்காளம்: 73.93 வீதம்

7 கட்டங்களாக நடைபெறும் இந்தியாவின் மக்களவைத் தேர்தலின் 4 ஆம் கட்டம் இம்மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கிரிக்கெட் விளையாடிய சிறுவன் பந்து பட்டதால் உயிரிழப்பு



கிரிக்கெட் விளையாடிய 11 வயது சிறுவன் அந்தரங்க பகுதியில் பந்து பட்டதில் மைதானத்திற்குள் சுருண்டு விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் மகாராஷ்டிரா புனேவில் இந்த துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் ஷௌர்யா என்ற 11 வயது சிறுவனே உயிரிழந்தவராவார்.

அந்த சிறுவன் பந்து வீசிய நிலையில் துடுப்பாட்ட வீரர் பந்தை நேரடியாக அவரை நோக்கி அடித்துள்ளார். இதில் ஷௌர்யாவின் அந்தரங்க பகுதியில் பந்து பலமாக பட்டதால் அவர் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்துள்ளார்.

இதையடுத்து சிறுவன் உடனடியாக அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இது தொடர்பான காணொலி வெளியாகி பலரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

# உக்ரைன் ஜனாதிபதியை கொல்லும் ரஷ்யாவின் சதி முயற்சி முறியடிப்பு

## இராணுவ உயரதிகாரிகள் இருவர் கைது




உக்ரைனிய பாதுகாப்பு சேவை ஜனாதிபதி வெலோடிமீர் ஜெலன்ஸ்கி மற்றும் பிற உயர்மட்ட உக்ரைனிய அதிகாரிகளை படுகொலை செய்வதற்கான ரஷ்ய சதியை முறியடித்ததாக தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த சதி முயற்சிக்கு உடந்தையாக இருந்த உக்ரைன் அரசாங்க பாதுகாப்பு பிரிவு கேணல்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் ரஷ்ய பாதுகாப்பு சேவைக்கு சொந்தமான முகவர்களின் வலையமைப்பின் ஒரு பகுதியாக இருந்தனர் என உக்ரைன் பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியை தவிர மற்ற இலக்குகளில் இராணுவ உளவுத்துறை தலைவர் கைரிலோ புடானோவ் மற்றும் உக்ரைனிய பாதுகாப்பு சேவை தலைவர் வாசில் மாலியுக் ஆகியோர் அடங்குவர்.

இந்த ஆண்டு மே 5 ஆம் திகதி வரும் ஆர்த்தடாக்ஸ் ஈஸ்டருக்கு முன்பு புடானோவை கொல்ல குழு திட்டமிட்டதாக கூறப்படுகிறது. கைது செய்யப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் ஏற்கனவே ஆளில்லா விமானங்கள் மற்றும் வெடிகுண்டுகளை வாங்கியுள்ளார் என்று உக்ரைனிய பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது.

செவ்வாயன்று ஐந்தாவது முறையாக பதவியேற்ற ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு இந்த கொலை செய்தி பரிசாக இருந்திருக்க வேண்டுமென உக்ரைனிய பாதுகாப்பு சேவை தலைவர் மால்யுக் தெரிவித்துள்ளார்.

# சீனாவில் கத்திக்குத்து தாக்குதல் இருவர் உயிரிழப்பு, பலர் காயம்






தென்மேற்கு சீனாவில் உள்ள மருத்துவமனையில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். 21 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த கத்திக்குத்து தாக்குதல் நேற்று யுனான் மாகாணத்தில் உள்ள ஜென்சியோங் மக்கள் மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவமனையில் நுழைந்த ஒரு மர்ம நபர் ஒருவர் கண்ணில் பட்டவர்களையெல்லாம் கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை அந்நாட்டு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.



# மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின் அபிவிருத்திக்கு அனுமதி அளித்தது அமைச்சரவை

மன்னார் மற்றும் கிளிநொச்சி – பூநகரியில் 484 மெகாவாட் காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியாவின் Adani Green Energy Limited நிறுவனத்தினால் இந்த பிரதேசங்களில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு கடந்த மார்ச் மாதம் 7ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, மேற்படி நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சரவையால் பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்த குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, உத்தேச கருத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின் அலகொன்று கிலோவாட் மணிக்கு 8.26 அமெரிக்க டொலர் பெறுமதியான விகிதத்திற்கு அமைய அங்கீகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், 20 வருடங்களுக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான விலை மனு கோரலை Adani Green Energy SL Limited நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மின்சக்தி , எரிசக்தி அமைச்சர் சமர்ப் பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# சு.கவின் பதில் தவிசாளராக செயற்படத் தடை: விஜேதாஸவின் மேன்முறையீட்டு மனு நிராகரிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளராக செயற்படுகின்றமையை தடுத்து கடந்த மாதம் 4 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவிற்கு எதிராக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மனுவை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி.என். சமரகோன் நேற்று நிராகரித்தார்.

இது தொடர்பான உத்தரவை மாவட்ட நீதிமன்றத்திடமே கோர வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.





# பிரிட்டன் வெளிவிவகார இராஜதந்திரியுடன் அநுர குமார திங்களன்று கலந்துரையாடல்

பிரித்தானிய வெளிவிவகார, பொது நலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ – பசிபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மெல்லர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள், பிராந்திய புவிசார் அரசியலின் சவாலான நிலைமைகள் மற்றும் பிரித்தானியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு ஆகிய விடயங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இலங்கைக்கான பிரதானி ஹுமைரா ஹாஷியா, இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பெட்ரிக், தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# ஜனாதிபதி நிதியத்தினால் புதிய புலமைப் பரிசில்

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய தற்போது வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக, மேலும் இரண்டு புலமைப்பரிசில் திட்டங்களை ஜனாதிபதி நிதியம் ஆரம்பித்துள்ளது.

அதன்படி, பிரிவெனா மற்றும் பெண் பிக்குணி கற்றை நிறுவங்களில் கற்கும் பிக்கு மற்றும் பிக்குணிகளுக்கும் ஏனைய மாணவர்களுக்கும், க.பொ.த. உயர்தரத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்களுக்குமான புதிய புலமைப் பரிசில் வேலைத்திட்டம் இம் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் பெண் பிக்குணி கற்றை நிறுவங்களுக்கும், ஏனைய மாணவர்களுக்கான 822 கற்கை நிறுவனங்கள் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருப்பதோடு, இதற்காக மேற்படி கற்கை நிறுவனமொன்றுக்கு 06 புலமைப்பரிசில்கள் என்ற அடிப் படையில் நிறுவனத் தலைவர்களின் பரிந்துரைக்கமைய பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டு கட்டங்களாக வழங்கப்படும் இந்த புலமைப்பரிசில் பிரிவெனாக்களில் கற்கும் 5000 வறிய மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதோடு, முதல் கட்டத்தின் கீழ் 2024 மே மாதம் தொடக்கம் 12 மாதங்களுக்கு 3,000 ரூபாவும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 24 மாதங்களுக்கு 6,000 ரூபாவும் வழங்கப் படவுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விவரங்களையும் விண்ணப்பத்தையும் www.presidentsfund.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் www.facebook.com/president.fund உத்தியோகபூர்வ Face Book பக்கத்திலும் பெற முடியும்.

அதேபோல் இந்த விண்ணப்பம் மற்றும் அறிவுறுத்தல்களை 2024-05-10 அரச வர்த்தமானியில் பிரசுரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலைமைப்பரிசிலுக்காக விண்ணப் பிக்கு பிரிவெனாக்களில் பயிலும் வறிய மாணவர்கள் உரிய வகையில் நிரப்பட்ட, விண்ணப்பங்களை 2024 மே 22 ஆம் திகதிக்கு முன்னதாக பிரிவெனா தலைவர்/நிறுவனத் தலைவரிடம் மட்டும் கையளிக்க வேண்டியது அவசியமெனவும், அதன் பின்னர் நிறுவனத் தலைவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்களின் விண்ணப்பம் வலயத்துக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் ஊடாக (பிரிவெனா) கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும்.

உயர்தரத்திற்கு தெரிவாகி தகவல் தொழில்நுட்ப பாடங்களை கற்கும் மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக் கமைய, இலங்கை தொலைத் தொடர் பாடல்கள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பின் கீழ் ஜனாதிபதி நிதியத்தினால் இந்த புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

அனைத்து கல்வி வலயங்களிலும் முன்னெடுக்கப்படவிருக்கும் இந்தப் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் வலயமொன்றில் குறைந்தபட்சமாக 50 மாணவர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தெரிவு செய்யப்படும் 2024 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு 24 மாதங்களுக்கு 6,000 ரூபாவும் வழங்கப்படும்.

இது தொடர்பிலான மேலதிக தகவல்களை www.facebook.com/president.fund உத்தியோகபூர்வ Face Book பக்கம் மற்றும் www.presidentsfund.gov.lk இணையத்தளம், கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணைத்தளமான www.moe.gov.lk தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழுவின் இணைய பக்கத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்பங்களை 2024 மே 22 ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி நிதியத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தூரில் மரம் வெட்டியவர் தவறி விழுந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் புத்தூரில் உள்ள ஆலயச் சூழலில் மரம் வெட்டிக் கொண்டு இருந்தவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் வசிக்கும் 61 வயதான ஓய்வுபெற்ற பல்கலைக்கழக உத்தியோகத்தரான முத்து சிவலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

காயமடைந்தவர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலை கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்புத் தொடர்கின்றது

சம்பளம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள தொடர் பணிப்பகிஷ்கரிப்பு ஆறாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் 17 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இலங்கையின் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ளக மற்றும் வெளிவாரியாக கல்வி கற்கும் சுமார் 2 லட்சம் மாணவர்கள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான பிரச்சினைக்கான தீர்வுகளை கல்வி அமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்தமையை அடுத்து, அது தொடர்பான பரிந்துரைகளை வழங்க அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பல கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள தங்கள் தொழிற்சங்க நடவடிக்கை நேற்றும் முன்னெடுக்கப்பட்டது என அகில இலங்கை சுதந்திர கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.





# தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குச் செல்லப் பாதைகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதை அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகளைத் திறக்குமாறும், இணைந்த வீதிகளை பயன்படுத்த அனுமதிக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பாதுகாப்பு பிரிவினரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

ஒட்டகப்புலம் பகுதிக்கு நேற்று விஜயம் செய்த ஆளுநர் விடுவிக்கப்பட்ட காணிகளை பார்வையிட்டமையுடன், காணி உரிமையாளர்களுடனும் கலந்துரையாடினார். யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி ) ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

வசாவிளான் கிழக்கு(J/244), வசாவிளான் மேற்கு(J/245), பலாலி வடக்கு (J/254), பலாலி கிழக்கு(J/253), பலாலி தெற்கு(J/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.8 ஏக்கர் காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது. இங்கு வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை கோரி பதிவு செய்துள்ளமையுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்த்தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி துப்பரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் இலகுவாக பிரவேசிக்கக்கூடிய வகையில் பாதைகளை திறக்கவும், வீதிகளை பயன்படுத்தவும் அனுமதி தருமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டமைக்கு அமைய, அந்த அனுமதிகளை பாதுகாப்பு பிரிவினருடன் கலந்துரையாடி ஆளுநர் பெற்றுக்கொடுத்தார்.

அதற்கமைய, பொன்னாலை – பருத்தித்துறை கடற்கரை வீதியில் கண்ணகி அம்மன் கோவில் சந்தியிலிருந்து நாகதம்பிரான் கோவில் வீதி ஊடாக விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியும். அத்துடன் வீரப்பளை வீதியில் பலாலி வீதி நோக்கி 100 மீற்றர் தூரத்திற்குள்ளும், வீரப்பளை சந்தியில் தெற்கு நோக்கி தம்பாளை வீதி (விமான நிலைய வீதி) ஊடாகவும் விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.









# விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவதற்கு நூறு மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு!







இலங்கையில் விவசாய மற்றும் வனப் பாதுகாப்புத் திட்டமொன்றில் இணைந்து செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் காலநிலை மாற்ற செயலகம் சார்பாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, காலநிலை இடர் மன்றம் சார்பாக அதன் பொதுச் செயலாளர் முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷிட் மற்றும் போர்த்துக்கலின் யேவையை ஊயிவையட நிறுவனம் சார்பில் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி கார்லோஸ் கோமஸ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

விவசாய விளைச்சல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேம்படுத்தப்பட்ட மற்றும் நிலைபேறான விவசாய முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையில் உள்ள கிராமப்புற சமூகங்களின் வீட்டு விவசாயத்தை மேம்படுத்துவதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் உள்ள பல விவசாய நிலங்கள் தற்போது சிறிய அளவில் உள்ளன. எனவே, குறைந்த விளைச்சல் மற்றும் குறைந்த வருமானம் ஆகியவற்றால் இவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 15,000 விவசாயிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்கும் முன்னோடித் திட்டம் அனுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படஉள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ள விவசாயம் மற்றும் காடுவளர்ப்புத் திட்டங்கள், காலநிலை பாதிப்பு மன்றத்தின் ஆதரவுடன் இலங்கையால் வரையப்பட்ட இலங்கையின் காலநிலை தாங்கும் திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நிலையான விவசாயத்தின் மூலம் வலுவான ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதன்போது ருவன் விஜேவர்தன மேலும் தெரிவிக்கையில் –

“நவீன விவசாயத்தை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தின் பிரகாரம், விவசாயத்திற்கான நவீன தொழில்நுட்பத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க போர்த்துக்கேய நிறுவனம் ஒன்று முதலீடு செய்ய முன்வந்துள்ளது. இது சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்காக அநுராதபுரம் மாவட்டத்தில் 15,000 குடும்பங்களும் 15,000 ஏக்கரும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த முன்னோடித் திட்டத்தில் 15 குடும்பங்களும் பதினைந்து ஏக்கர்களும் இணைக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு குடும்பத்திற்கு சுமார் 6000 அமெரிக்க டொலர்கள் செலவை முதலீட்டு நிறுவனம் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்த 25 ஆண்டுகளுக்கு விவசாயத்திற்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்படும்.

விவசாயம் தொடர்பான நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதும் இத்திட்டத்தின் மூலம் செய்யப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்கு பிரச்சினையாக இருந்த அவர்களின் விளைச்சலுக்கு சந்தையை உருவாக்க முடியும். இந்த திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கொள்வனவு செய்ய முதலீட்டு நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. தற்போது மிளகாய், தக்காளி, தர்பூசணிப் பயிர்ச் செய்கையில் கவனம் செலுத்தி வருகின்றது.

எதிர்காலத்தில், ஏனைய பயிர்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டவுள்ளது. இந்த முன்னோடித் திட்டம் வெற்றியடைந்ததையடுத்து, ஏனைய மாவட்டங்களுக்கும் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இந்த நவீன விவசாயத்தின் மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதே சமயம் விவசாயிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் முடியும்.”– என்றார்.

விவசாயத்தை நவீனமயமாக்குவது தொடர்பான மிகவும் இலட்சியமான மற்றும் பயனுள்ள திட்டத்தை இலங்கை கொண்டுள்ளது என்று இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் மாலைத்தீவு ஜனாதிபதி, காலநிலை இடர் மன்றத்தின் பொதுச் செயலாளர் மொஹமட் நஷிட் தெரிவித்தார்.

இலங்கையின் காலநிலை சுபீட்சத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

காலநிலை இடர் மன்றத்தின் தலைமையில் செயற்படுத்தப்படும் இந்த திட்டம் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் பொருளாதார வளர்ச்சியை சமநிலைப்படுத்தும் குறைந்த கார்பன் மேம்பாட்டு உத்திகளை ஊக்குவிப்பதுடன், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் கானாவில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதாகவும், மேலும் ஏழு நாடுகள் ஆர்வம் காட்டும் நிலையில் இந்தத் திட்டங்கள் உலகளவில் பிரபல்யம் அடைந்து வருவதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியாவின் கொன்சல் ஜெனரல் சந்தீப் சமரசிங்க, கஸ்தூரி அனுராதநாயக்க மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# மொத்த வெளிநாட்டு ஒதுக்கம் 9.6 சதவீதத்தினால் அதிகரிப்பு

நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கம் கடந்த ஏப்ரல் மாதம் 9.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கம் கடந்த ஏப்ரல் மாதம் 5.43 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

நீடித்து நிலைத்திருக்கும் உறுதிப்பாடு என்ற தொனிப்பொருளில் இலங்கை மத்திய வங்கியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த மார்ச் மாதம், இலங்கையின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கம் 4.96 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மன்ன ரமேஷை 72 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரிப்பதற்கு அனுமதி

டுபாயில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட போதைப்பொருள் வர்த்தகரான மன்ன ரமேஷை 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்இந்தஉத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.

டுபாயில் தலைமறைவாகியிருந்த மன்ன ரமேஷ், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் நேற்று அதிகாலை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்.

அவிசாவளை பிரதேசத்தை மையமாக கொண்டு வர்த்தகர்களிடம் கப்பம் கோருதல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொலைகள் என மன்னா ரமேஷ் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பொது சுகாதார பரிசோதகர் ரொஷான் குமாரவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது

பொது சுகாதார பரிசோதகர் ரொஷான் குமார கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் போலியான பெயரில் துபாய்க்கு செல்வதற்காக வருகை தந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

கரந்தெனிய பகுதியை வதிவிடமாகக் கொண்ட 30 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத ஆயுததாரிகள்



இருவரால் முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், கரந்தெனிய பொது சுகாதார பரிசோதகர் ரொஷான் குமார உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# நேற்று ஒன்றாகச் சென்று கைதிகளை சந்தித்த சிறிதரனும் கஜேந்திரனும்!

கடந்த பெப்ரவரி மாதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளியும், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவருமான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் (அரவிந்தன்) மற்றும் கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக நீதிமன்றில் முற்படுத்தப்படாமல் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மூதூரைச் சேரந்த எஸ். சுதாகரன் ஆகிய இருவரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் நேற்று கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது தனது விடுதலையை வலியுறுத்தி கடந்த இரண்டு நாள்களாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆனந்தவர்ணன், தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரினார் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

பொய்க்குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் தனது தரப்புக் கருத்துகளைக் கூறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படாமலேயே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த வழக்குத் தவணை எப்போது என்றுகூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளனர் எனவும் இச்சந்திப்பின் போது ஆனந்தவர்ணன் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று மூதூரைச் சேரந்த எஸ்.சுதாகரன் என்பவரும் இந்தியாவிலிருந்து திரும்பும்போது கைது செய்யப்பட்டு கடந்த ஒருவருடத்திற்கும் மேலாகதடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார் எனவும், தனது விடுதலைக்காக நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆனந்தவர்ணன் உடல்நலக்குறைவால் அவதியுறுகிறார் எனவும், உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்ந்தால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதனால் அவரது கோரிக்கையை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட தரப்புகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியமையோடு, இவ்விடயம் தொடர்பில் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளது கவனத்திற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கெஹலியவின் எழுத்தாணை மனுக்களை 16 ஆம் திகதி விசாரணை செய்ய முடிவு!



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் எழுத்தாணை மனுக்களை இம்மாதம் 16 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டி.என். சமரகோன் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதனை தவிர, மருந்து விநியோக பிரிவின் பணிப்பாளர் டொக்டர் கபில விக்ரமநாயக்கவின் எழுத்தாணை மனுவையும் எதிர்வரும் 16 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன தலைமையிலான நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

# மல்லாகத்திலும் இயங்கியது அனுமதியின்றி கொல்களம்!

## நீதிமன்ற உத்தரவில் சீல் வைப்பு



யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் உரிய அனுமதிகள் இன்றி இயங்கி வந்த கொல்களம் நீதிமன்ற உத்தரவில் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

அதன் உரிமையாளர் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையான மையை அடுத்து ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

மல்லாகம் பகுதியில் உரிய அனுமதிகள் இன்றி கொல்களம் ஒன்று இயங்கி வருவதாக சுகாதாரப் பிரிவினருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொலிஸாருடன் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்ற போது, அங்கிருந்து மாடு ஒன்றும் கன்று ஒன்றும் மீட்கப்பட்டன. அத்துடன் மாடுகளை வெட்டப் பயன்படுத்தும் கூர்மையான ஆயுதங்கள், மாடு கட்டும் கயிறுகள் உள்ளிட்டவையும் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்டசான்று பொருள்களை மல்லாகம் நீதிமன்றில் பாரப்படுத்திய வேளை, மாட்டையும், கன்றையும் தெல்லிப்பழையில் உள்ள அன்பு இல்லத்தில் வைத்து பராமரிக்க உத்தரவிட்ட மன்று, கொல்களத்தின் உரிமையாளரை நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் நேற்றைய தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது , உரிமையாளர் மன்றில் முன்னிலையானார். விசாரணைகளை அடுத்து , அவரை ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

அதேவேளை கொல்களத்தில் மாடுகள் கடத்தி வரப்பட்டு, இறைச்சியாக்கப்பட்டனவா? இறைச்சியாக்கப்பட்ட மாடுகள் திருடப்பட்ட மாடுகளா ? பசு மாடுகளும் இறைச்சியாக்கப்பட்டுள்ளனவா? – போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை நடாத்தி மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.



# உற்பத்திக்கு ஏற்றாற்போன்று சம்பளம்: பெருந்தோட்ட நிறுவனங்கள் யோசனை

## ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்றன

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்திற்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிப்பதற்காக தாம் ஏற்கனவே முன்வைத்துள்ள உற்பத்திக்கு ஏற்றாற்போன்று சம்பளம் வழங்கும் முன்மொழிவு தொடர்பில் தாம் இதன்போது மீண்டும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றோம் என பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் ரொஷான் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்தால் ஒரு தொழிலாளிக்கு சுமார் 1,800 ரூபா நாளாந்த சம்பளம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், உற்பத்தியும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முன்மொழிவு தொடர்பில் ஆராயுமாறு நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி தொழில் அமைச்சருக்கு பணிப்புரை விடுத்தார் எனவும் ரொஷான் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான தீர்மானத்தின் பின்னரே, புதிதாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என தொழில் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் கப்பம் கோரி கொலை அச்சுறுத்தல் விடுத்தாரென ராணுவ மேஜருக்கு எதிராக முறைப்பாடு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் நபர் ஒருவரிடம் கல்முனை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ மேஜர் ஒருவர் 3 லட்சம் ரூபா கப்பமாக தருமாறும் இல்லாவிடில் போதை பொருள் வைத்து, மனைவியையும் தன்னையும் தூக்கி சென்று இல்லாமல் செய்ய போகிறார் என அச்சுறுத்தி மிரட்டிவருகிறார் எனப் பாதிக்கப்பட்டவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முறைப்பாடு செய்துள்ளார் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது:-

மட்டக்களப்பைச் சேர்ந்த ரங்கன் என் அழைக்கப்படும் சாமித்தம்பி வேலாயுதம் என்பவர் வெளிநாட்டுக்கு அனுப்பும் இடை தரகராக கல்முனையைச் சேர்ந்த ஒருவரிடம் 5 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவையும் அதனுடன் 5 பேரிடம் பணத்தை வாங்கி அதனை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் ஒருவருக்கு வழங்கியுள்ளார்.

சம்பந்தப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் ஏமாற்றி வந்த நிலையில் அவருக்கு எதிராக இடைதரகர் கல்முனையைச் சேர்ந்த நபரின் சாட்சியுடன் மாவட்ட விசேட குற்றப் புலனாய்வு பிரிவிடம் முறைப்பாடு செய்தமையடுத்து அந்த வேலைவ்வாப்பு முகவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டு, வழக்கு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்த பின்னணியில் கல்முனை



PEOPLE'S BANK

PEOPL'S ELECTRONIC TELLER
BATTICALOA MAIN
11.04.24 0075R801
ACC NO 023200110035079
CUSTOMER NAME- KK JANITH LAKSHAN
11:05:04 6749
000931667258 A/C CARDLESS DEPOSIT

DEPOSIT AMT LKR 30,000.00

| DEN | CNT | AMT |
|---|---|---|
| LKR 5,000.00 | 6 | LKR 30,000.00 |

YOUR TRANSACTION IS SUCCESSFUL
THANK YOU FOR BANKING WITH US



இராணுவ முகாம் மேஜர் இடைத்தரகரான ரங்கனிடம் கையடக்க தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு கல்மனையில் உள்ள நபரிடம் வாங்கிய பணத்தைத் தன்னிடம் தருமாறும், உடன் 3 லட்சம் ரூபாவைத் தனது வங்கி கணக்கிற்குப் போடுமாறு கப்பம் கோரியதுடன், பணம் தர மறுத்தால் போதொ பொருளை வீட்டில் வைத்து மனைவியையும் உன்னையும் தூக்கி கொண்டு சென்று இல்லாமல் செய்வேன், 4 ஆம் மாடிக்கு அனுப்புவேன், நான் கொழும்பில் பெரிய பின்னணியைச் சேர்ந்தவன், விளையாடக் கூடாது என அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இராணுவ மேஜர் அனுப்பிய வங்கி கணக்கிற்கு இடை தரகரான ரங்கன் 30 ஆயிரம் ரூபாவை கப்பமாக அனுப்பியுள்ளார் எனவும், தொடர்ந்து இராணுவ மேஜர் கையடக்கத் தொலை பேசி ஊடாக அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரி வருகிறார் எனவும், தனக்கும் தனது மனைவிக்கும் உயிர் ஆபத்து ஏற்பட்டுள் ளதாகவும் பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரியை பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு வருமாறு தாங்கள் அழைப்பு விடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பாதிக்கப்பட்டவர் மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக் குழுவிடமும் இராணுவ மேஜருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றை நேற்றய் செவ்வாய்க்கிழமை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தற்போதைய பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டால் பழைய நெருக்கடி வரும்

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



நாட்டில் தற்போது நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள பொருளாதார கொள்கை மாற்றமடைந்தால் மீண்டும் பழைய நிலைமை ஏற்படலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இது தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

'நீடித்த ஸ்திரநிலை' என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற இந்த ஊடக சந்திப்பில் புதிய மத்திய வங்கி சட்டத்திற்கு அமைய, மத்திய வங்கி அறிவித்துள்ள முதலாவது பொருளாதார விவரிப்புத் தொடர்பில் தெளிவுபடுத்தப் பட்டது.

நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக மீண்டும் வழமைக்குத் திரும்புவதாக மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத் திட்டத்துடன் இணக்கம் காணப்பட்ட இலக்குகள் என்பவை அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்ட செயற்றிட்டம் எனவும் அரசாங்கம் இணங்கியுள்ள இந்த செயற்றிட்டத்தை தற்போதைய முறையில் தொடர்ந்தால் நிலையாகப் பேண முடியும் என்றும் தாம் அறிவித்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

மக்களை தெளிவுபடுத்துவதற்காகவே இவ்விடயங்களைக் கூறுகின்றேன் எனவும் தற்போதைய பொருளாதார கொள்கையில் மாற்றம் ஏற்பட்டால், மீண்டும் பழைய கடினமான நிலை ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவித்தார்.

தற்போது முன்னெடுக்கப்படுகின்ற கொள்கை எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.05.2024




எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப் படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணபப்டுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள்.




உங்கள் மனதில் இருக்கும் குழப் பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. இழப்புகளைத் தவிர்க்க பணத்தை பாதுகாக்க வேண்டும்.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக் கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சியான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபடலாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப் படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

பணிகளை குறித்த காலத்திற்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக் கான பாராட்டைப் பொறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.05.2024




இன்று உங்கள் விருப்பத்துக்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிக மாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்தது போல் உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத் துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப் படலாம். பணிச் சுமையயை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது. இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.




இன்றைய முக்கியமான நிகழ்வுக ளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந்துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரிகட்டி விடலாம்.

